# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

**கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு**

## ஐக்கிய அரபு இராச்சியம், டுபாய் - GULFOOD இல் இலங்கை நாட்டு கண்காட்சி மண்டபம்

**2027 மார்ச் 15 - 19 அன்று - டுபாய், ஐ.அ.இ.**

ஐக்கிய அரபு இராச்சியம், டுபாய், டுபாய் கண்காட்சி நகரில் 2007 மார்ச் 15 தொடக்கம் 19 வரை நடைபெறவுள்ள GULFOOD 2027 கண்காட்சியில் இலங்கையின் பங்கேற்புக்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) ஏற்பாடு செய்துள்ளது. GULFOOD உலகின் மிகப்பெரிய உணவு மற்றும் பானங்கள் கண்காட்சிகளில் ஒன்று என்பதோடு அது 195 நாடுகளுக்கு மேற்பட்ட 250,000 இற்கும் அதிகமான வருகையாளர்களையும் 8,500 கண்காட்சியாளர்களையும் கொண்டதாகும்.

Gulfood கண்காட்சி இலங்கை ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கு தமது உணவு மற்றும் பானங்கள் உற்பத்திகளை மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் தெற்காசிய (MEASA) மாத்திரம் அன்றி ஐ.ஒ. மற்றும் அமெரிக்காவிலும் பிரபலப்படுத்துவதற்கும் புதிய சந்தைப் போக்குகள், புத்தாக்க உற்பத்திகள், போட்டித்தன்மை வாய்ந்த நடத்தை மற்றும் புதிய தொழிநுட்பங்களை துறையில் கையாள்வதற்கு தளம் ஒன்றை வழங்குகிறது.

### யாருக்கானது

பின்வரும் உற்பத்திப் பிரிவுகளில் சர்வதேச உணவுத் தரங்களை பின்பற்றி மற்றும் சர்வதேச சந்தைக்கு வழங்க முடியுமான திறன் பெற்ற உணவு மற்றும் பானங்கள் பதப்படுத்துநர்கள்/ ஏற்றுமதியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- புதிய/ பதப்படுத்திய பழங்கள் மற்றும் காய்கறிகள் (உறையவைக்கப்பட்டவை, நீரகற்றிய, டின் செய்யப்பட்ட/ போத்தலில் அடைக்கப்பட்ட, பழச்சாறுகள் முதலியன)
- தேங்காய் அடிப்படையிலான உணவு உற்பத்திகள் (உலர்ந்த தேங்காய், தேங்காய் பால், கிறீம், தூள் முதலியன)
- இனிப்புப் பொருட்கள் மற்றும் பேக்கரி பொருட்கள், பால் சார்ந்த பொருட்கள், சிறப்பு மற்றும் வசதியான உணவுப் பொருட்கள்.
- வாசனைச் சரக்கு மற்றும் வாசனைச் சரக்கு கலவைகள், பரிசுப் பொதிகள், அத்தியாவசிய எண்ணெய்கள் முதலியன.
- தேயிலை (பெறுமதி சேர்க்கப்பட்டது – சுவையூட்டப்பட்ட தேயிலை பைகள், பரிசுப் பொதிகள் முதலியன)
- தானியங்கள் மற்றும் தானிய அடிப்படையிலான பொருட்கள்
- பானங்கள்
- ஆரோக்கிய உணவு உற்பத்திகள், மூலிகை பொருட்கள் மற்றும் இயற்கை உணவு உற்பத்திகள்
- உணவுப் பொருட்களுக்கான மூலப்பொருட்கள் மற்றும் உணவுச் சேர்க்கைப் பொருட்கள்
- மற்ற தொடர்புடைய உணவு உற்பத்திகள்

### பங்கேற்புச் செலவு

இடம் மற்றும் நிர்மாணச் செலவுகள் மற்றும் அனைத்து தொடர்புடைய செலவுகளையும் பங்கேற்கும் நிறுவனங்கள் ஏற்றல் வேண்டும். கிடைக்கப்பெறும் நிதிக்கு அமைவாக தேர்வு செய்யப்படும் SME நிறுவனங்களுக்கான இடம்/ நிர்மாணத்தின் செலவின் பகுதியை ஏற்று நிதி உதவி வழங்க EDB பரிசீலனை செய்யும்.

### விண்ணப்பம் மற்றும் தேர்வு

விண்ணப்பங்களை www.srilankabusiness.com என்ற EDB இணையதளத்தில் ("Announcements" பிரிவின் கீழ்) கிடைக்கப்பெறும் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் மேற்கொள்ளல் வேண்டும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "Gulfood 2027" என்று குறிப்பிட்டு 2026 ஜூலை 17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் - ஏற்றுமதி விவசாயம், EDB என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இந்த நிகழ்ச்சிக்காக பொருத்தமான பங்கேற்பாளர்களை தேர்வு செய்வதற்கு குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் EDB மூலம் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

மேலதிக விபரங்களுக்கு, 011-2300732, 070 208 7273, மின்னஞ்சல்: madurika@edb.gov.lk இல் உதவிப் பணிப்பாளர்/ செல்வி மதுரிகா மெனிக்புர அவர்களை தொடர்புகொள்ளவும்.

---

**தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,**
**NDB-EDB கோபுரம், 42, நவம் மாவத்தை,**
**கொழும்பு - 02**
**இணையதளம்: www.srilankabusiness.com**